புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 PRGI.No.PNTAM/26/A7529 GSTIN: 33KXSPK6994Q1ZX

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor F1 ,7th Street, Nehru Colony, Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com
ஆசிரியர்: K.சபியுல்லா

மலர்: 02 | இதழ்: 83 | 28-09-2026 | திங்கள் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி
Volum 02 | Issue: 83 | 28-09-2026 | Monday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry

## “தீவிரவாதத்துக்கு எதிராக தாக்குதலை மேற்கொள்ள இந்தியா தயார்”: ராஜ்நாத் சிங்



புதுடெல்லி: செப்.28–

“தீவிரவாதத்துக்கு எதிராக தாக்குதலை மேற்கொள்ள இந்தியா தயார் நிலையில் உள்ளது,” என்று தனியார் தொலைகாட்சி நிறுவனம் நடத்திய நிகழ்வில் பங்கேற்ற பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சிந்து நதி நீர் பாகிஸ்தானுக்குள் செல்வதை தடுத்து திசை திருப்பும் இந்தியாவின் செயல் போர் நடவடிக்கையாகக் கருதப்படும் என்று ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் ஆற்றிய உரையில் பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்திருந்தார். அதற்கு இந்தியா பதிலடி கொடுத்தது. இந்நிலையில், ராஜ்நாத் சிங் இந்த கருத்தை தெரிவித்துள்ளார்.

“இந்தியா அமைதியை விரும்புகிறது. ஒருபோதும் போரை விரும்பவில்லை. உலகில் எந்தவொரு வெளிநாட்டின் நிலப்பகுதியையும் இந்தியா கைப்பற்ற விரும்பவில்லை. இந்தியா யாரையும் அச்சுறுத்த கூட விரும்பவில்லை.

இருப்பினும் இந்திய தேசம் அதன் பாதுகாப்பினை எந்தவொரு சூழலிலும் விட்டுக்கொடுக்காது. இந்தியா பேச்சுவார்த்தையை நம்புகிறது. ஆனால், எந்தவொரு நாடும் இந்தியாவுக்கு எதிராக தீவிரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுத்தால் அத்துடன் பேச்சுவார்த்தை என்பது முடிவுக்கு வருகிறது. இது குறித்து எஸ்சிஓ மாநாட்டில் பிரதமர் மோடி தெளிவுப்படுத்தி உள்ளார்.

அண்டை நாடுகள் தீவிரவாதத்தை அரசு கொள்கையாக தொடரும் வரை, தீவிரவாதத்துக்கு எதிரான தாக்குதலுக்கு இந்தியா தயாராக உள்ளது. இதை நாங்கள் அண்டை நாட்டுக்கும், உலகுக்கும் தெவித்துக் கொள்கிறோம். இந்தியா அந்த நடவடிக்கைக்கு தயாராக உள்ளது” என்று ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

## தரிசன டிக்கெட் குறித்த வதந்திகளை நம்ப வேண்டாம்: திருப்பதி தேவஸ்தானம் வேண்டுகோள்

திருமலை: செப்.28–

திருப்பதி தேவஸ்தானம் ஒவ்வொரு மாதமும் ரூ.300 சிறப்பு தரிசனம் உட்பட அனைத்து ஆர்ஜித சேவைகள், முதியோர், மாற்றுத்திறனாளிகளுக்கான டிக்கெட் அனைத்தையும் ஆன்லைனில் வெளியிடுகிறது.

ஆனால் 3 நிமிடங்களில் அவை விற்றுத் தீர்ந்து விடுகிறது. சிலருக்கு மட்டுமே தரிசன டிக்கெட்கள் அல்லது இலவச டோக்கன்கள் கிடைக்கின்றன. இதனால் லட்சக்கணக்கான பக்தர்கள் அதிருப்தி அடைகின்றனர்.

யாரோ வேண்டுமென்றே பல டிக்கெட்களை முன்கூட்டியே முன்பதிவு செய்து விடுவதால்தான் இப்படி நடக்கிறது என சமூக வலைதளங்களில் தகவல்கள் பரவுகின்றன.

இதுதொடர்பாக, திருப்பதி தேவஸ்தானம் வெளியிட்டுள்ள அறிக்கையில், “ஒவ்வொரு மாதமும் 2.69 லட்சம் ரூ.300 சிறப்பு தரிசன டிக்கெட்களை தேவஸ்தானம் வெளியிடுகிறது. ஆனால், சராசரியாக ஒரே நேரத்தில் 6 லட்சம் பக்தர்கள் தலா 4 டிக்கெட் என்ற வீதத்தில் 24 லட்சம் டிக்கெட்களுக்கு முன்பதிவு செய்ய முயற்சிக்கின்றனர்.

பலர் ஒரே நேரத்தில் முயற்சிப்பதால்தான் டிக்கெட் முன்பதிவு செய்ய முடிவதில்லை. வங்கி சர்வர்களும் இதற்கு காரணமாகும். பல பக்தர்களும் விரைவில் இப்பிரச்சினையை சரி செய்ய தேவஸ்தானம் நடவடிக்கை எடுக்கும். அதுவரை வதந்திக்களை நம்ப வேண்டாம்’’ என தெரிவித்துள்ளது.

## புதுச்சேரி– கேரளத்துக்கு விமான சேவை: துணைநிலை ஆளுநர் தகவல்

புதுச்சேரி: செப்.28–

“புதுச்சேரியை மாஹே மற்றும் கேரள பகுதிகளோடு இணைக்கும் விமான சேவையும் பரிசீலனையில் இருக்கிறது. உடான் விமான சேவை திட்டத்தின் கீழ் கண்ணூர், கோழிக்கோடு, மற்றும் கொச்சிக்கு விமான சேவை திட்டமிடப்பட்டு இருக்கிறது” என புதுச்சேரி துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் தெரிவித்தார்.

புதுச்சேரி கேரள சமாஜம் சார்பில், ஓணம் குடும்ப சவுஹ்ரித மேளா கடலூர் சாலை புனித அந்தோனியார் மஹாலில் நடைபெற்றது. துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நிகழ்ச்சியை குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார்.

மேலும் புதுச்சேரி கேரள சமாஜத்தின் ஆண்டு மலரையும் துணைநிலை ஆளுநர் வெளியிட்டார். நிகழ்ச்சியில், மாஹே எம்எல்ஏ அசோக்குமார், கேரள சமாஜ நிர்வாகிகள் பங்கேற்றனர்.

இதில் துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் பேசுகையில், “புதுச்சேரி கேரள சமாஜம் மதம், சாதி, அரசியல் கடந்து சிறப்பாக செயல்பட்டு வருவதை நான் பாராட்டுகிறேன். இது போன்ற நிகழ்ச்சிகள் நம்மிடையே ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் வலுப்படுத்துகிறது. மகிழ்ச்சி, நல்லிணக்கம் மற்றும் பரஸ்பர ஆதரவு ஆகியவற்றை நம்மிடையே நிலைத்திருக்க செய்கிறது.

மத்திய அரசின் மருத்துவக் காப்பீட்டு திட்டங்களின்கீழ் 70 வயதுக்கும் மேற்பட்ட முதியோர்களுக்கும் மருத்துவ காப்பீடு வழங்கப்படுகிறது. அதிகபட்சமாக ரூ.5 லட்சம் வரை மருத்துவ காப்பீடு பெற முடியும். இந்த புதிய திட்டத்தின் பலன் அனைவரையும் சென்றடையும் விதமாக பதிவு நடைமுறைகளை கேரள சமாஜம் முன்னெடுக்க வேண்டும்.

புதுச்சேரியை அடுத்த வில்லியனூரில் ஒரு ரயில் முனையம் அமைக்க திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது. அதற்காக ரூ. 2,000 கோடி ஒதுக்கீடு செய்யவும் ரயில்வே அமைச்சகம் சம்மதம் தெரிவித்திருக்கிறது. புதுச்சேரியை மாஹே மற்றும் கேரள பகுதிகளோடு இணைக்கும் விமான சேவையும் பரிசீலனையில் இருக்கிறது. உடான் விமான சேவை திட்டத்தின் கீழ் கண்ணூர், கோழிக்கோடு, மற்றும் கொச்சிக்கு விமான சேவை திட்டமிடப்பட்டு இருக்கிறது.

புதுச்சேரி விமான நிலையத்தின் ஓடுபாதை 2500 மீட்டராக அதிகரிக்கப்படும். அதன் மூலமாக பெரிய அளவிலான சர்வதேச விமான சேவை தொடங்கப்படும். இந்த சேவைகள் புதுச்சேரியை கேரளத்துடன் இணைத்து பயனளிக்கும் என்று நம்புகிறேன்” இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# நாடு முழுவதும் வங்கி ஊழியர்கள் இன்று முதல் 3 நாட்கள் வேலை நிறுத்தம்

சென்னை: செப்.28–

முக்கிய கோரிக்கைகளை வலியுறுத்தி, வங்கி ஊழியர்கள் அதிகாரிகள் செப்.28ம் தேதிமுதல் 3 நாட்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ள நிலையில், கட்டணமில்லாமல் ஏடிஎம்களில் பணம் எடுக்க வங்கிகள் சலுகை அறிவித்துள்ளன.

வாரத்தில் 5 நாட்களுக்கு வேலைத்திட்டத்தை அமல்படுத்துவது, அனைத்து ஊழியர்களுக்கும் விகிதாச்சார அடிப்படையில் பிஎல்ஐ (லாபத்தின் அடிப்படையில் இணைப்பு ஊக்கத்தொகை) சமமாக வழங்குவது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வங்கி ஊழியர்கள் சங்கங்களின் ஐக்கிய மன்றமும், இக்கோரிக்கைகளுடன் ஐடிபிஐ வங்கியை தனியார்மயமாக்கும் முயற்சியை கைவிடுவது போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி, அகில இந்திய வங்கி அதிகாரிகள் சங்கமும் நாடு தழுவிய அளவில் செப்.28 (இன்று) முதல் 30ம் தேதி வரை வேலை நிறுத்தத்தில் ஈடுபட உள்ளனர்.

இந்த 3 நாட்கள் வேலை நிறுத்தத்துக்கு முன்னதாக சனி, ஞாயிறு விடுமுறை நாட்களாக இருப்பதால், 5 நாட்கள் வங்கிகள் மூடப்படும் நிலை ஏற்பட்டது. 5 நாட்கள் வங்கிகள் செயல்படாமல் போனால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள் என கருதி செப்.27 (ஞாயிறு) வங்கிகள் செயல்படும் என மத்திய அரசு அறிவித்தது. அதன்படி,தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள்,அனைத்து தனியார்வங்கிகள் நேற்று (செப்.27) செயல்படுவதற்கான ஏற்பாடு நடைபெற்றது.

3 நாட்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட வங்கி ஊழியர்கள், அதிகாரிகள் ஆயத்தமாகி வரும் நிலையில், பணம் டெபாசிட் செய்தல், எடுத்தல், காசோலை பரிவர்த்தனை மற்றும் ஏடிஎம்களில் பணம் எடுத்தல் போன்ற முக்கிய சேவைகள் பாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதனால், அனைத்து வங்கிகளும் தங்களின் வாடிக்கையாளர்களுக்கு எஸ்எம்எஸ் மூலம் தகவல்களை அனுப்பியுள்ளது. இதுதவிர, ஏடிஎம்களில் பணம் எடுப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தற்போது நீக்கப்பட்டுள்ளன. அதாவது வேலை நிறுத்த காலத்தில் பொதுமக்கள் எந்த வங்கி ஏடிஎம்களையும் பயன்படுத்திக்கொள்ளலாம். அதற்கு கட்டணம் வசூலிக்க கூடாது என்று அறிவுறுத்தி இருப்பதால் பொதுமக்கள் தங்கள் தேவைக்கு ஏடிஎம் மையங்களை பயன்படுத்தலாம். இன்று வங்கிகள் செயல்படும் நிலையில், அகில இந்தியவங்கி அதிகாரிகள் சங்கத்தினர் வேலையில் ஈடுபடப்போவது இல்லை என்று தெரிவித்துள்ளனர்.

நேற்று (ஞாயிறு) வங்கி செயல்பாடுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. எனவே, பொதுவிடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமையின் சட்டப்பூர்வ அந்தஸ்து (தகுதி) குறித்து தெளிவுப்படுத்த வேண்டும் என ஆர்பிஐக்கு அகில இந்திய வங்கி அதிகாரிகள் சங்கம் சார்பில் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

## கரூர் கூட்ட நெரிசல் முதலாண்டு நினைவேந்தல்: திரளானோர் கண்ணீர் அஞ்சலி

கரூர்: செப்.28–

கரூர் தவெக கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்களின் முதலாமாண்டு நினைவு நாளை முன்னிட்டு கரூர் பழைய பேருந்து நிலைய ரவுண்டானா அருகே அலங்கரிக்கப்பட்ட மேடையில் வைக்கப்பட்டிருந்த பதாகைக்கு உயிரிழந்தவர்களின் உறவினர்கள், தவெகவினர் கருப்பு ஆடை அணிந்து மெழுகுவர்த்தி ஏந்தி, கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

கரூர் வேலுசாமிபுரத்தில் கடந்தாண்டு செப். 27ம் தேதி நடந்த தவெக பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு தவெக சார்பில் தலா ரூ.20 லட்சம் அறிவிக்கப்பட்டு அவர்களது வங்கி கணக்குகளில் தொகை வரவு வைக்கப்பட்டது.

அதன்பின் உயிரிழந்தவர்கள் குடும்பங்களை தவெக தலைவர் விஜய் சென்னைக்கு வரவழைத்து ஆறுதல் கூறினார். இதுதொடர்பாக சிபிஐ விசாரணை நடைபெற்று வருகிறது. இதையடுத்து நடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக தனிப்பெரும் கட்சியாக வெற்றிப்பெற்று காங்கிரஸ் உள்ளிட்ட பிற கட்சிகளின் ஆதரவோடு ஆட்சி அமைத்தது.

இதையடுத்து உயிரிழந்தவர்களின் 31 பேர் குடும்பத்தினருக்கு அரசு சார்பில் கடந்த ஜூலை 10ம் தேதி முதல்வர் விஜய் கருணை அடிப்படையில் பணிகளை வழங்கினார். முன்னதாக மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் பங்கேற்ற முதல்வர் விஜய் உயிரிழந்தவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்கப்படும் என தெரிவித்திருந்தார்.

கரூர் வேலுசாமிபுரத்தில் கடந்தாண்டு செப். 27ம் தேதி உயிரிழந்தவர்களின் முதலாமாண்டு நினைவு நாளை முன்னிட்டு தவெக சார்பில் கரூர் பேருந்து நிலைய ரவுண்டானா அருகே நேற்று (செப். 27ம் தேதி) மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.

இதில் அலங்கரிக்கப்பட்ட மேடையில் வைக்கப்பட்டிருந்த பதாகையில் உயிரிழந்த 41 பேரின் புகைப்படங்களுக்கு பதிலாக எரியும் மெழுகுவர்த்தி படங்கள், அதன் கீழே உயிரிழந்தவர்களின் பெயர்கள் இடம் பெற்றிருந்தன.

மாநில துணைப் பொதுச் செயலாளரும், மாவட்ட அமைப்புச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான எம்.ஆர்.விஜயபாஸ்கர், கரூர் மேற்கு மாவட்ட செயலாளரும், மாநில நிர்வாகக் குழு உறுப்பினருமான வி.பி.மதியழகன், கிருஷ்ணராயபுரம் எம்எல்ஏ ம.சத்யா, கரூர் கிழக்கு மாவட்ட செயலாளர் பாலசுப்பிரமணியன் உள்ளிட்ட நிர்வாகிகள், கட்சியினர் கருப்பு ஆடை, கருப்பு வில்லை அணிந்து, எரியும் மெழுகுவர்த்தி ஏந்தி, மலர் வளையம் வைத்து மவுன அஞ்சலி செலுத்தினர்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர், உறவினர்கள் மலர் வளையம் வைத்து, மெழுகுவர்த்தி ஏந்தி, கண்ணீர் விட்டு அழுது, அஞ்சலி செலுத்தினர்.

### ஈரோடு கோவை உள்ளிட்ட மேற்கு மண்டல மாவட்டங்களில் அதிகரித்து வரும் டெங்கு பரவல்..

## சுகாதாரத் துறை அதிகாரிகளுக்கு மருத்துவக் கல்வி இயக்குனர டாக்டர் வி.லோகநாயகி எச்சரிக்கை..

### பொதுமக்களும் விழிப்புடன் இருந்து ஒத்துழைப்பு வழங்கவும் வேண்டுகோள்..

ஈரோடு. செப். 28

மேற்கு மண்டலங்களில் உள்ள மாவட்டங்களில் டெங்கு பரவல் அதிகம் இருப்பதாகவும், அதிகாரிகள் உரிய தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்றும் தமிழ்நாடு மருத்துவ கல்வி இயக்குனர் டாக்டர் வி. லோகநாயகி தெரிவித்துள்ளார்.



கடந்த சில வாரங்களாக தமிழ்நாட்டில் டெங்கு நோய் அதிகளவில் பரவி வருகிறது. இதுகுறித்து தமிழக அரசும், சுகாதார துறையும் தொடர்ந்து அதிகாரிகளுக்கும், பொதுமக்களுக்கும் உரிய அறிவுரைகளை வழங்கி வருகிறது.

இந்த நிலையில் சில நாட்களுக்கு முன்பு ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செய்தியாளர்களை சந்தித்த தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் கே ஜி அருள்ராஜ், தற்போதுள்ள பருவநிலை சூழல் மாற்றத்தின் காரணமாக தமிழகத்தில் பல்வேறு காய்ச்சல் நோய் பொதுமக்களுக்கு ஏற்படுகிறது.

தொடர்ந்து டெங்கு நோயை பரப்பும் ஏடிஎஸ் கொசுவின் காரணமாக தமிழ்நாட்டில் டெங்கு பரவல் சற்று அதிகமாக உள்ளது.

இந்த டெங்கு பரவல் என்பதுஈரோடு மாவட்டத்திலும் இருந்து வரும் நிலையில், தற்பொழுது டெங்கு பரவல் மாவட்டத்தில் கட்டுப்பாட்டில் தான் உள்ளது. தொடர்ந்து டெங்கு பரவலை தடுக்க நாடு முழுவதும் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை சுகாதாரத் துறை எடுத்து வருகிறது.

பொதுமக்கள் சுகாதாரத்துறை தெரிவிக்கும் அறிவுரைகளை மேற்கொண்டு விழிப்புடன் இருந்து அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தெரிவித்தார்.

தொடர்ந்து தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் டெங்கு பரவல் அதிகரித்து வரும் நிலையில், ஈரோடு, கோவை, திருப்பூர், சேலம், கரூர், நாமக்கல், கிருஷ்ணகிரி உள்ளிட்ட மேற்கு மண்டலத்தில் உள்ள மாவட்டங்களில் டெங்கு பரவல் என்பது சற்று அதிகரித்து காணப்படுவதாக தமிழ்நாடு மருத்துவக் கல்வி இயக்குனரகம் மற்றும் ஆராய்ச்சி துறையின் இயக்குனராக பொறுப்பு வகிக்கும் டாக்டர் வி. லோகநாயகி தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் அனைத்து மாவட்ட சுகாதாரத்துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு டெங்கு தடுப்பு நடவடிக்கைகளில் தீவிரம் காட்ட வேண்டும் என எச்சரித்து உத்தரவிட்டு உள்ளார்.

# கோவை பிருந்தாவன் வித்யாலயா பப்ளிக் பள்ளியின் 12 ஆம் ஆண்டு விளையாட்டு விழா

கோவை செப்:28

கோவை மதுக்கரை பகுதியில் உள்ள இப்பள்ளியின் இவ்விழாவானது தாளாளர் வசந்தராஜன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் விக்னேஷ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.




விளையாட்டு நிகழ்ச்சிகளை முன்னிட்டு மாணவ மாணவியருக்கு ஏராளமான விளையாட்டுப் போட்டிக்கு 4 நாட்களுக்கு முன்னதாகவே ஓட்டப் பந்தயம், குண்டு எறிதல்,ஈட்டி எறிதல்,தடைகளை தாண்டிய ஓட்டப் பந்தய போட்டி,நீளம் தாண்டுதல் ,உயரம்தாண்டுதல் போன்ற போட்டிகள் விளையாட்டுத் துறை ஆசிரியர்கள் மூலம் நடத்தப்பட்டது.மாணவ மாணவியர் விருப்பப்பட்ட விளையாட்டை தேர்ந்தெடுத்து அதில் தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினர்.

விளையாட்டு நிகழ்ச்சிகள் அனைத்தும் பள்ளி முதல்வரான திருமதி.வனிதா திருமூர்த்தி அவர்கள் தலைமையிலும்,1500 பார்வையாளர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து அமைச்சர் தேசிய கொடியையும்,தாளாளர் வசந்தராஜன் திருமூர்த்தி அவர்கள் பள்ளி கொடியையும்,முதல்வர் திருமதி.வனிதா அவர்கள் விளையாட்டு கொடியையும் ஏற்றி நிகழ்ச்சியை துவக்கி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து தீரன் சின்னமலை பெயரில் நீல நிற அணிவகுப்பும், வேலு நாச்சியார் பெயரில் பச்சை நிற அணிவகுப்பும்,வீரபாண்டிய கட்டபொம்மன் பெயரில் சிவப்பு நிற அணிவகுப்பும்,வாஞ்சிநாதன் பெயரில் மஞ்சள் நிற அணிவகுப்பும் நடத்தப்பட்டது.

பிறகு விளையாட்டு ஜோதியை ஏற்றி வைத்து நிகழ்ச்சி இனிதே துவங்கியது. தொடர் ஓட்டப் போட்டி நிகழ்த்தப்பட்டது இப்போட்டியின் முடிவில் வாஞ்சிநாதன் பெயரில் மஞ்சள் நிற அணி முதலிடத்தையும், வேலு நாச்சியார் பெயரை கொண்ட நீல நிறஅணி இரண்டாம் இடத்திலும் வெற்றி பெற்றது.

நான்கு வகை அணி வகுப்புகளில் தீரன் சின்னமலை பெயரில் அமைந்த நீல நிற அணி முதல் இடத்தையும்,வாஞ்சிநாதன் பெயரில் அமைந்த மஞ்சள் நிற அணி இரண்டாவது இடத்தையும் பெற்றது.

அனைத்து விளையாட்டு நிகழ்ச்சி நடைபெற்ற பிறகு வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு சிறப்பு விருந்தினர் பரிசுகளை வழங்கினார்.

மாணவ மாணவியருக்கு விளையாட்டு நன்மைகளையும், அதிக மாணவர்கள் தங்களை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்ற ஊக்கமான அறிவுரைகளை வழங்கினார்.

# மகளிர் பொதுமருத்துவம்,பல்,ஹோமியோ,சித்த மருத்துவம் கண் தொடு வர்ம சிகிச்சை மருத்துவ முகாம்



கோவை செப்: 28

பன்னாட்டு லயன்ஸ் சங்கங்கள் 3242 சி நேரு நகர் லயன்ஸ் சங்கம், அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம் நாட்டு நலப் பணித்திட்டம், PSG மருத்துவக் கல்லூரி மருத்துவமனை,RVS மருத்துவ கல்லூரி மருத்துவமனை, பொன்னம்மாள் துரைசாமி கண் மருத்துவமனை, லாரன்ஸ்– மாயோ கண் மருத்துவமனை,வீயெஸ் பல் மருத்துவமனை ,மோகன்ஸ் டயபெடிக் சென்டர் மற்றும் RVS பல் மருத்துவமனை இணைந்து நடத்திய அவினாசிலிங்கம் பல்கலைக்கழகத்தில் உள்ள மாணவர்களுக்கு மூன்று நாட்கள் நடைபெற்றது.

பன்னாட்டு லயன்ஸ் இயக்கம் 3242 சி மாவட்டத்தின் முதலாம் துணை ஆளுநர் வழக்கறிஞர் சூரி. நந்தகோபால் முகாமைத் துவக்கி வைத்தார்.

அவிநாசிலிங்கம் பல்கலைக்கழகம் நாட்டு நலப்பணித் திட்ட ஆலோசகர் கனக சுப்பிரமணி,பன்னாட்டு லயன்ஸ் இயக்கம் 3242 சி மாவட்டத்தின் ஜி எம் டி ஒருங்கிணைப்பாளர் லயன் S செந்தில்குமார் ஆகியோர் தலைமையிலும் இதற்கான ஏற்பாடுகளை அவினாசிலிங்கம் நாட்டு நலப்பணித் திட்ட நிர்வாகிகள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த மருத்துவ முகாமில் 25க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் 25க்கும் மேற்பட்ட செவிலியர்கள் 50 க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள் 100 க்கும் மேற்பட்ட நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.நேரு நகர் லயன்ஸ் சங்கத்தின் மகளிர் மாவட்ட தலைவர் சுப்பு செந்தில் குமார் சங்கத்தின் தலைவர் தேஜஸ்வினி செயலாளர் தாமிரா செந்தில்குமார்,ஆக்டிவ் செயலாளர் நடராஜ் பொருளாளர் உலகநாதன்

அட்மின் கிரீஸ் எல் சி ஐ எஃப் சிவக்குமார் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# திருவள்ளூர் பகுதியில் உள்ள பள்ளிகளில் சமையலறை கூடங்களில் மாவட்ட ஆட்சியர் ச.கவிதா திடீர் ஆய்வு

திருவள்ளூர் செப் 28 :

திருவள்ளூர் பகுதிகளில் உள்ள பள்ளிகளில் சமையலறை கூடங்கள் சுத்தமாக பராமரித்து சுகாதாரமான முறையில் உணவு தயார் செய்து பள்ளி மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படுகிறதா என்பது குறித்து மாவட்ட ஆட்சியர் ச.கவிதா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.



திருவள்ளூர் அருகே கொட்டையூர் கிராமத்தில் செயல்பட்டு வரும் அரசு நிலைப்பள்ளியில் பல்லி விழுந்த உணவு உள்கொண்ட மாணவ, மாணவிகள் 40 பேருக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டது. இதன் தொடர்ச்சியாக பள்ளிகளில் செயல்படும் சமையலறை கூடங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யவும் அரசு உத்தரவிட்டது.

அதன் அடிப்படையில் பூண்டி ஊராட்சி ஒன்றியம், திருப்பாச்சூர் கிராமத்தில் செயல்பட்டு வரும் அரசு தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சியர் ச.கவிதா திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது, சமையலறை கூடத்தின் கட்டுமானம் நன்றாக உள்ளதா, சுத்தமாக பராமரிக்கப்படுகிறதா என்பதை பார்வையிட்டார். அதைத்தொடர்ந்து மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் உணவு சுத்தமாகவும், தரமாகவும் தயார் செய்யப்பட்டுள்ளனவா என்பதையும் ஆய்வு செய்தார்.

அதைத் தொடர்ந்து உணவு பொருள்கள் வைப்பு அறை, சமையல் அறையில் பயன்படுத்தவும் பாத்திரங்கள் நாள்தோறும் சுத்தம் செய்யவும், பூச்சிகள் வராமல் தடுக்கும் முன்னெச்சரிக்கை மேற்கொள்ளவும் அங்குள்ள பணியாளர்களுக்கு ஆலோசனை வழங்கினார். மேலும், சமையலறையில் கட்டுமானப்பணிகள் சேதம் உள்ளனவா என்பது குறித்தும் ஆசிரியர்களிடம் கேட்டறிந்தார். சமையலறை கூடம், உணவு பொருள் வைப்பு அறை சேதம் அடைந்தால் உடனே சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்கவும் மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார்.

இதேபோல், பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் கொசவன்பாளையம், சிறுவானூர் கண்டிகை, புல்லரம்பாக்கம் ஆகிய கிராமங்களில் செயல்பட்டு வரும் அரசு தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இதில் திருவள்ளூர் வட்டாட்சியர் சரண்யா, பூண்டி வட்டார வளர்ச்சி அலுவலர் குமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வுI பதவிகளுக்கான முதல்நிலைத்தேர்வு நடைபெற்ற ஈரோடு மாவட்டம், கொல்லம்பாளையம், கார்மல் மெட்ரிக், மேல்நிலைப்பள்ளி தேர்வு மையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசரி, ஆய்வு மேற்கொண்டார். உடன் ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் முத்துச்சாமி உள்ளார்.

# தொழில் வாரியான நல வாரியங்களை பாதுகாக்க தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்

## கட்டடத் தொழிலாளர் பஞ்சாயத்து சங்கம்வலியுறுத்தல் :

திருச்சி செப் 28

கட்டடத்தொழிலாளர் பஞ்சாயத்து சங்கத்தின் முப்பெரும் விழா திருச்சி டிவிஎஸ் டோல்கேட் அருகில் உள்ள திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு கட்டிட தொழிலாளர் பஞ்சாயத்து சங்கத்தின் மாநில அமைப்பு செயலாளர், மாவட்ட தலைவர் கருணாநிதி தலைமை தாங்கினார். கட்டடத் தொழிலாளர் பஞ்சாயத்து சங்க மாவட்ட செயலாளர் முருகன் வரவேற்று பேசினார். கூட்டத்தில் நிர்வாகிகள் போஸ், பரிமளநாதன், நாராயணசாமி , திருமுருகன், மன்சூர் அலி, விஸ்வலிங்கம் உள்ளிட்ட நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மத்திய அரசின் 44 தொழிலாளர் சட்டங்களை ரத்து செய்து தொழில் வாரையான நல வாரியங்களை பாதுகாக்கும் வகையில் தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்திற்கு இரண்டு சதவீதம் லிவி அமல்படுத்த வேண்டும். கட்டுமான பொருட்களான மணல், கம்பி, செங்கல் உள்ளிட்ட பொருட்களின் விலை ஏற்றத்தை கட்டுப்படுத்தும் வகையில் ஜிஎஸ்டியை குறைக்க வேண்டும். தொழிலாளர்களை ஆன்லைன் மூலம் பதிவு செய்தே தவிர்த்து தொழிற் சங்கங்கள் மூலமாக பதிவை எளி மைப்படுத்த வேண்டும். மாவட்டந் தோறும் குறை தீர்ப்பாயம் அமைக்க வேண்டும். ஓய்வூதியம் பெறும் தொழிலாளர் களுக்கு அனைத்து விதமான பண பயன்கள் தர முன்வர வேண்டும். நகர பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்ய வழிவகை செய்ய வேண்டும்என்று பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டனகூட்டத்தில் கீதா மற்றும் மக்கள் இயக்கங் களின் தேசிய கூட்டமைப் பின் ஒருங்கிணைப்பாளர் அருள் தாஸ் ஆகியோருக்கு பட்டம் மற்றும் பாராட்டு விழா நடைபெற்றது.



சேலம் மாவட்டத்தில்,டெங்கு காய்ச்சல் தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத் தலைமையில் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது.



புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே ராஜேந்திர புரத்தில் அறந்தாங்கி கள்ளுச்சந்து குதிரை வண்டி கழகம் சார்பாக நான்காம் ஆண்டு மாட்டு வண்டி மற்றும் குதிரை வண்டி எல்கை பந்தயம் நடைபெற்றது,

இதில் பெரிய குதிரை, சின்ன குதிரை, பெரிய மாடு புது குதிரை, என நான்கு பிரிவுகளாக நடைபெற்றது. போட்டியில் புதுக்கோட்டை தஞ்சை,திருச்சி ராமநாதபுரம் சிவகங்கை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட, மாட்டு வண்டிகள் மற்றும், 80க்கும்மேற்பட்ட குதிரை வண்டிகள் போட்டியில் கலந்து கொண்டன , போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாடு மற்றும் குதிரையின் உரிமையாளர்களுக்கு ரொக்க பரிசும் கோப்பைகளும் வழங்கப்பட்டது. சாலையின் இரு புறமும் நின்று ஆயிரக்கணக்கானோர் பந்தயத்தை கண்டு ரசித்தனர், அறந்தாங்கி காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

# சேலத்தில் பட்டா பெயர் மாற்றம் செய்ய ரூ.5 ஆயிரம் நில அளவையருக்கு ஊழல் தடுப்பு போலீசார் கொடுத்த ஷாக்.

சேலம். செப்.28–

சேலம் மாவட்டம், அம்மாபேட்டை பகுதியில் வசித்து வருபவர் கதிரவன். கூலித் தொழிலாளியான இவர், தனது தந்தை பெயரில் உள்ள வீட்டை தனது பெயரில் மாற்றுவதற்காக அதற்கான பட்டாவில் பெயர் மாற்றம் செய்வதற்காக இணைய வழியில் விண்ணப்பித்திருந்தார்.

இதற்காக, அம்மாபேட்டை மண்டல அலுவலகத்தில் உள்ள நில அளவையர் பிரிவுக்கு நேரில் சென்று தனது விண்ணப்பம் தொடர்பாக கதிரவன் கேட்டுள்ளார். அப்போது, பணியில் இருந்த நில அளவையர் முருகேசன் நிலத்தை அளவீடு செய்து, பட்டா வழங்க பரிந்துரை செய்வதற்கு ரூ. 5 ஆயிரம் லஞ்சம் வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். இதை கேட்டு அதிர்ச்சி



அடைந்த கூலித் தொழிலாளி கதிரவன் தன்னிடம் அவ்வளவு பணம் இல்லை, நான் பார்க்கும் கூலி தொழிலில் குடும்பத்தை நடத்தவே வருமானம் சரியாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

தொழிலாளியிடம் ரூ. 5 ஆயிரம் லஞ்சம் கேட்ட நிலை அளவையர்

இதை கேட்டும் மனம் மாறாத நில அளவையர் முருகேசன், தான் கேட்டபடி ரூ. 5 ஆயிரம் லஞ்சம் தர வேண்டும். இல்லையெனில், பட்டா கிடைப்பதில் சிரமம் ஏற்படும் என்று மிரட்டியதாக தெரிகிறது. இதை கேட்டு மேலும் அதிர்ச்சி அடைந்த கதிரவன் லஞ்சம் கொடுக்க மறுப்பு தெரிவித்து அங்கிருந்து புறப்பட்டு வீட்டுக்கு சென்று விட்டார். பின்னர், மறுநாள் கதிரவனை செல்போனில் தொடர்பு கொண்ட நில அளவையர் முருகேசன், தான் கேட்ட பணம் தயாராக உள்ளதா என்று கேட்டுள்ளார்.

ஊழல் தடுப்பு காவல் நிலையத்தில் புகார்

இதற்கு, தொழிலாளி கதிரவன் மீண்டும் தன்னிடம் அவ்வளவு பணம் இல்லை. லஞ்சம் கொடுக்கவும் விரும்பவில்லை என்று பதில் அளித்துள்ளார். இதற்கு, நில அளவையர் முருகேசன் ரூ. 2,500 தருமாறு பேரம் பேசியுள்ளார். இதற்கும் உடன்படாத கூலித்தொழிலாளி கதிரவன் லஞ்சம் கொடுக்க மறுப்பு தெரிவித்து செல்போனை துண்டித்து விட்டார். தொடர்ந்து, இது தொடர்பாக சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

நில அளவையர் இடைத்தரகர் ஆகியோர் அதிரடி கைது

அந்த புகாரின் பேரில், ரசாயன பொடி தடவப்பட்ட ரூ. 5 ஆயிரம் ரூபாய் நோட்டுகளை நில அளவையரிடம் கொடுக்குமாறு போலீசார் அறிவுறுத்தினர். அதன் அடிப்படையில், அம்மாபேட்டை மண்டல அலுவலகத்தில் பணியில் இருந்த நில அளவையரிடம் லஞ்ச பணத்தை கொடுத்த போது அங்கு மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் முருகேசன் கைது செய்தனர். அவருக்கு உடந்தையாக இருந்த புரோக்கர் பூவரசனையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.



உலக சுற்றுலா தினம் 2026 ஈரோடு மாவட்டம், கொடுமுடி மகுடேஸ்வரர் மற்றும் வீரநாராயணப் பெருமாள் திருக்கோயில் படித்துறை பகுதியில் தூய்மை பேணுதல் முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி துவக்கி வைத்தார்.

### ஜனநாயகத்தை அச்சுறுத்தாதீர்கள்; கருத்தை கருத்தால் எதிர்கொள்ளுங்கள் !”

# அமைச்சர் சம்பத் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம்

## அதிமுக, திமுக ஆதரவாளர்களுக்கு கடும் எச்சரிக்கை விடுத்த கனிமொழி எம்எல்ஏ !!

### “தேர்தல் களத்தை ஜனநாயக ரீதியில் எதிர்கொள்ளுங்கள்; மக்களை சந்திப்பதைத் தடுப்பது அரசியல் மாண்பு அல்ல!”

கோவை/ தாராபுரம் செப்டம்பர் 28:

தேர்தல் களத்தில் அரசியல் கட்சிகளுக்கு இடையே கருத்து வேறுபாடுகள் இருப்பது இயல்பானது என்றும், ஆனால் அரசியல் எதிரிகளை அச்சுறுத்துவது, அவர்களை மக்களை சந்திக்க விடாமல் தடுப்பது அல்லது தாக்குதல் போன்ற வன்முறை சம்பவங்களில் ஈடுபடுவது ஜனநாயகத்தின் அடிப்படை மாண்புகளுக்கு எதிரானது என்றும் தவெக சட்டமன்ற உறுப்பினர் கனிமொழி சந்தோஷ் MLA கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளார்.



அமைச்சர் சம்பத் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக வெளியாகியுள்ள தகவல்களைத் தொடர்ந்து அவர் வெளியிட்டுள்ள கண்டனத்தில் கூறியிருப்பதாவது:

“அரசியல் என்பது கருத்துக்களுக்கான களம். அந்தக் களத்தில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம்; கொள்கை ரீதியாக கடுமையான விமர்சனங்களும் இருக்கலாம். ஆனால் அதற்கு பதிலாக வன்முறையைத் தேர்ந்தெடுப்பது ஒருபோதும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் நடைமுறை அல்ல.

ஒரு அரசியல் கட்சியின் நிர்வாகி, வேட்பாளர் அல்லது மக்கள் பிரதிநிதி மக்களை சந்திக்கச் செல்லும்போது, அவரை தடுத்து நிறுத்துவது, அச்சுறுத்துவது அல்லது ஆதரவாளர்கள் மூலம் தாக்குதல் நடத்துவது போன்ற செயல்கள் ஜனநாயக அரசியலின் அடிப்படை நெறிமுறைகளையே கேள்விக்குள்ளாக்கு கின்றன.

குறிப்பாக தேர்தல் காலத்தில் ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் மக்களை நேரடியாக சந்தித்து தங்களது கொள்கைகள் மற்றும் நிலைப்பாடுகளை எடுத்துரைக்கும் உரிமை உள்ளது.

அதேபோல், அந்தக் கருத்துக்களை ஏற்றுக்கொள்வதா, நிராகரிப்பதா என்பதை தீர்மானிக்கும் முழுமையான உரிமை மக்களுக்கு மட்டுமே உள்ளது.

மக்களை சந்திப்பதற்கான அரசியல் களத்தை வன்முறையின் மூலம் முடக்க முடியாது.

தங்களது ஆதரவாளர்களை பயன்படுத்தி மக்களை சந்திக்க விடாமல் தடுப்பதும், அவர்களை அச்சுறுத்துவதும், தாக்குதல்களில் ஈடுபடுவதும் அரசியல் மாண்பு அல்ல.

அதிமுக மற்றும் திமுக போன்ற அரசியல் கட்சிகள் தேர்தல் களத்தில் போட்டியை ஜனநாயக ரீதியாக எதிர்கொள்ள வேண்டும். அரசியல் போட்டி என்பது கொள்கைகளுக்கு இடையிலான போட்டியாக இருக்க வேண்டும்; தனிநபர்கள் மீது நடத்தப்படும் தாக்குதலாக மாறிவிடக்கூடாது.

கருத்தை கருத்தால் எதிர்கொள்ளுங்கள்.

கொள்கையை கொள்கையால் எதிர்கொள்ளுங்கள்.

மக்களின் தீர்ப்பை மக்களிடமே விட்டுவிடுங்கள்.

வன்முறை மூலம் மக்களின் மனதை மாற்ற முடியாது. அச்சுறுத்தல்கள் மூலம் ஜனநாயகத்தின் குரலை ஒடுக்க முடியாது. தேர்தல் களத்தில் யார் வெற்றி பெற வேண்டும் என்பதை எந்த அரசியல் கட்சியும் தீர்மானிக்க முடியாது. மக்கள்தான் இறுதி தீர்ப்பை வழங்குபவர்கள். எனவே அரசியல் களத்தில் போட்டியிடுங்கள்; ஆனால் வன்முறையை அரசியல் கருவியாக மாற்றாதீர்கள். ஜனநாயகத்தை அச்சுறுத்தாதீர்கள்.

மக்களின் குரலாகவும், மக்களின் உரிமைக்காகவும் தவெக தொடர்ந்து ஜனநாயக களத்தில் நிற்கும் என்று திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

## தேசிய சுகாதார திட்ட இயக்குனர் டாக்டர். அணிஷ் சேகர் இ.ஆ.ப., ஆணையர் பொன்மணி ஆகியோர் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் டெங்கு கொசு ஒழிப்பு பணி ஆய்வு

திருச்சி. செப்.28



திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டல எண் 4, வார்டு எண்கள் 52 மற்றும் 65 பட்டத்தம்மாள் தெரு, ராஜராஜேஸ்வரி நகர் மற்றும் மார்சிங் பேட்டை காவலர் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் தேசிய சுகாதார திட்ட இயக்குனர் டாக்டர். திரு. அணிஷ் சேகர் இ.ஆ.ப., ஆணையர் திருமதி.நே. பொன்மணி இ.ஆ.ப., ஆகியோர் டெங்கு கொசு ஒழிப்பு பணி (26.09.2026)ஆய்வு செய்தார்கள்.

மாநகராட்சி ஆணையர் தெரிவித்ததாவது, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பகுதி முழுவதும் டெங்கு விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, வீடுகளை ஆய்வு செய்தபொழுது திறந்த நிலையில் உள்ள தூய தண்ணீர் சேமித்து வைக்கப்பட்ட கலன்கள், தொட்டிகள், டயர்கள், காலி டப்பாக்கள் ஆகியவற்றில் உள்ள சிறிதளவு தண்ணீரில் டெங்கு கொசு உற்பத்தியாகும் லார்வா கண்டறியப்பட்டு அதற்கான ஆதாரங்கள் வீடுகள் தோறும் இருப்பது அகற்றப் பட்டது. ஆகவே, மாநகராட்சியில் உள்ள குடியிருப்புகளில் வசிக்கும் அனைவரும் ஒன்று சேர்ந்து கொசு

உற்பத்தியாகும் ஆதாரங்களை கண்டறிந்து அகற்ற வேண்டும்.

டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுத்திட மூன்று முக்கிய பணிகளாக 1.புகை மருந்து அடிப்பதன் மூலம் முதிர்வடைந்த கொசுக்களை அழித்தல், 2.காய்ச்சல் வந்தவர்களுக்கு சிகிச்சை மூலம் குணமாக்குதல், 3.லார்வா நிலையில் உள்ள புழுக்களை அபேட் மருந்து ஊற்றி கொல்லுதல் மற்றும் டெங்கு கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து பொது மக்கள் ஒத்துழைப்புடன் அகற்றுதல் மாநகராட்சி மூலம் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. டெங்கு அறிகுறிகள் தெரிய வந்தால் அப்பகுதியில் தனிக்கவனம் செலுத்தப்பட்டு நோய் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன. மாநகர பொதுமக்கள் சாதாரண சாய்ச்சல் இருந்தாலும் உரிய தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள மாநகராட்சி மற்றும் அரசு மருத்துவமனைகளில் தேவையான சிகிச்சைகள் இலவசமாக பெறலாம்

என்று மாநகராட்சி ஆணையர் திருமதி.நே. பொன்மணி இ.ஆ.ப., அவர்கள்தெரிவித்தார்.

டெங்கு கொசு ஒழிப்பு பணி ஆய்வில் மாவட்ட நல அலுவலர் திரு. மண்வண்ணன் மாநகர நகர் நல அலுவலர் திரு.கார்த்திகேயன் மற்றும் அலுவலர்கள் ,பணியாளர்கள் உடன் உள்ளனர்.



சேலம்,சங்ககிரி அருகே ராஜாமணி தோட்டம் பகுதியில் செயல்பட்டு வந்த வல்கனைசிங் பட்டறையில் திடீர் தீ விபத்து.லாரி டயர்கள்,உதிரிபாகங்கள் உள்ளிட்ட சுமார் ரூ.2 லட்சம் மதிப்பிலான பொருட்கள் எரிந்து சேதமடைந்தன.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கிளை கூட்டம் கிளை செயலாளர் தோழர் .பன்னீர் தலைமையில் நடைபெற்றது



புதுக்கோட்டை, செப்.28–

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி ஒன்றியம் சுப்பிரமணியபுரத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கிளை கூட்டம் கிளை செயலாளர் தோழர் .பன்னீர் தலைமையில் நடைபெற்றது கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் ராஜேந்திரன் கலந்து கொண்டு மாவட்ட குழு முடிவுகளை பற்றியும் இன்றைய அரசியல் சூழல் பற்றியும் விளக்கி பேசினார் ஒன்றிய செயலாளர் இரா. ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு நடந்துள்ள வேலைகள் பற்றியும் ஒன்றிய குழு முடிவுகளை பற்றியும் பேசினார். கலந்து கொண்டவர்கள்: பாலசுப்பிரமணியன், சுப்பிரமணியன், மேகலா, சத்யா, அழகேஸ்வரி,சித்ரா, பிரபாகரன் மற்றும் பலர் கலந்து கொண்டு பொது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது (1)விஜயபுரம் ஊராட்சியில். ஊராட்சி நிர்வாகத்திற்கு நிரந்தர ஊராட்சி செயலர் நியேமிக்க வேண்டும்.(2) சுப்பிரமணியபுரம் சுற்று வட்டார பகுதிகளில் அடிக்கடி ஏற்படுகின்ற மின் தடை சரி செய்ய சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் மற்றும் மாவட்ட நிர்வாகமும் நடவடிக்கை எடுக்க வேண்டும். (3) விஜயபுரம் பெரிய ஏரிக்கு வருகிற அம்முனிச்சத்திரம் வாய்க்காலில் இருந்து 4 நம்பர் துமூசு வழியாக வருகிற கிளை வாய்க்கால் புதர் செடிகள் மண்டி கிடப்பதால் ஏரிக்கு வருகிற தண்ணீர் வராமல் ஏரி வறண்டு தண்ணீர் இன்றி காணப்படுவதால் அப்பகுதியில் நிலத்தடி நீர் பாதிக்கும் அபாயம் உள்ளது எனவே அப்பகுதி மக்கள் விவசாயிகள் பயன் பெறும் வகையில் சரி செய்து தண்ணீர் வர நடவடிக்கை எடுக்க வேண்டும் (4)விஜயபுரம் வடக்கு பகுதியில் உள்ள மேல் நீர்தேக்க தொட்டி முற்றிலும் இடிந்து விழும் அபாயம் உள்ளது எனவே மாவட்ட நிர்வாகம் தலையிட்டு உடனடியாக அந்த நீர் தேக்க தொட்டியை இடித்து விட்டு புதிய நீர் தேக்க தொட்டி கட்டி தர வேண்டும் (5)விஜயபுரம் வடக்கு பகுதியில் இயங்கி வரும் ஊராட்சி ஒன்றிய தொடக்க பள்ளிக்கு சுற்று சுவர் மற்றும் கழிப்பறை வசதி ஏற்படுத்தி தர வேண்டும் (6) சுப்பிரமணியபுரம் சுற்று வட்டார பகுதிகளில் தற்போது பரவி வரும் மர்மக் காய்ச்சலை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க தமிழக அரசை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.(7) புதுக்கோட்டையை வறட்சி மாவட்டமாக அறிவிக்க கோரியும், அடிக்கடி ஏற்படுகின்ற மின் தடையை சரி செய்ய கோரியும் குடி தண்ணீர் தட்டுப்பாட்டை போக்கிட வலியுறுத்தி வருகிற செப்டம்பர் 30/09/2026 புதன்கிழமை காலை 10 மணிக்கு அறந்தாங்கி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடை பெறும் ஆர்ப்பாட்டத்திற்கு நம் பகுதியில் உள்ள விவசாயிகள், மற்றும் பொதுமக்களை திரட்டி பங்கேற்பு செய்வது என்று முடிவு செய்யப்பட்டது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன..



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வட்டம் வாக்கூர் கிராமத்தில் இளைஞர்கள் பசுமை அமைப்பு சாரபில் சுற்றுசூழல் பாதுகாப்பு மற்றும் நீர்நிலைகளைப் பாதுகாக்கும் வகையில் பனை விதைகள் மற்றும் மரக்கன்றுகள் நடும் பணிகள் நிறைவு விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேக் அப்துல் ரஹ்மான் பனை விதையினை நட்டு வைத்தார்.

## சேலத்தில் கொடூரம் குடும்பமா சேர்ந்து காட்டுல செஞ்ச காரியம் மரத்தில் கட்டி வைத்து அடித்துக் கொல்லப்பட்ட நபர்.

சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே உள்ள நெய்யமலை பகுதியில் குடும்பத் தகராறு காரணமாக நடைபெற்ற ஒரு பயங்கரச் சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கோவிந்தராஜ் என்பவரை அவரது குடும்பத்தினரே மரத்தில் கட்டிவைத்துத் தாக்கிப் படுகொலை செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவரின் உடலை ரகசியமாக வனப்பகுதியில் கொண்டு சென்று புதைத்துள்ளனர்.



இந்தச் சம்பவம் குறித்துத் தகவல் அறிந்த காவல்துறையினர் தீவிர விசாரணை நடத்தி, வனப்பகுதியில் புதைக்கப்பட்டிருந்த கோவிந்தராஜின் உடலைத் தோண்டி எடுத்துள்ளனர். இக்கொடூரச் செயலில் தொடர்புடையதாகக் கூறப்பட்டு கோவிந்தராஜின் மனைவி, மகன், மாமனார் மற்றும் மனைவியின் சகோதரர் ஆகிய நான்கு பேரையும் போலீசார் அதிரடியாகக் கைது செய்துள்ளனர்.

குடும்பத் தகராறு காரணமாக சொந்தக் குடும்பத்தினரே ஒருவரைக் கொன்று புதைத்த இந்தச் சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் பீதியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பான கூடுதல் தகவல்கள் மற்றும் விசாரணைகளின் விவரங்கள் தற்போது சமூக வலைதளங்களில் தீயாய் பரவி வருவதுடன், இணையத்தில் பெரும் விவாதப் பொருளாகவும் மாறியுள்ளது.

## பெண் பாலியல் புகார்; கருப்பு முருகானந்தம் மீது 7 பிரிவுகளில் வழக்கு

திருச்சி: செப்.28–

திருச்சியை சேர்ந்த பெண் ஒருவர், பாஜவில் ஓபிசி அணியின் முக்கிய நிர்வாகி இருந்தார். அவரை பாஜவின் மாநில பொது செயலாளராக இருந்த கருப்பு முருகானந்தம் திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி ஏமாற்றியதாக பாஜ தலைமையிடத்தில் அந்த பெண் புகார் அளித்தார். இதைத் தொடர்ந்து, கருப்பு முருகானந்தத்தை மாநில பொது செயலாளர் பொறுப்பிலிருந்து அக்கட்சியின் தலைவர் நயினார் நாகேந்திரன் நீக்கி உத்தரவிட்டார்.

அதேபோல புகார் அளித்த பெண்ணும் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டார். இந்த நிலையில்,“கருப்பு முருகானந்தம் என்னை உயர்பொறுப்பில் உள்ளர்களுக்கு விருந்தாக்க நினைத்தார். மேலும் என்னுடைய ஆபாச படங்களை வெளியிடுவதாக கூறி மிரட்டி வருகிறார் என்று திருச்சி மாநகர காவல்துறை ஆணையர் அலுவலகத்தில் பாதிக்கப்பட்ட பெண் புகார் அளித்திருந்தார். அதன்பேரில், கருப்பு முருகானந்தம் மீது 7 பிரிவுகளின் கீழ் ஸ்ரீரங்கம் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் நேற்று வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் அங்காளம்மன் கோவிலில் நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை புரிந்து தரிசனம் செய்து வரும் நிலையில் புரட்டாசி மாத பௌர்ணமி தினத்தை முன்னிட்டு அதிகாலை மூலவர்

அம்மனுக்கு பால் தயிறு சந்தனம் உள்ளிட்ட வாசனை திராவிடங்கள் சிறப்பு அலங்காரம் செய்து மகா தீபம் ஆராதனை நடைபெற்றது பக்தர்கள் சாமி தரிசனம் செய்து திருக்கோவில் வளாகத்தில் உள்ள மண்டபத்தில்108 பெண்கள் அமர்ந்து

திருவிளக்கு பூஜையில் ஈடுபட்டனர் கோவில் பூசாரி அம்மனைப் பற்றி பாடல் பாடினார் ஏராளமான பெண்கள் திருவிளக்கு பூஜையில் அம்மனை வழிபட்டனர் விழாவிற்கான இயற்பாட்டினை கோவில் உதவியாளர் சக்திவேல் குழு அறங்காவலர் தர்மகத்தா பச்சையப்பன் ஏழுமலை சுரேஷ் மதியழகன் சரவணன் வடிவேலு சந்தானம் மேலாளர் சதீஷ் உள் துரை மணியன் அண்ணாமலை காசாளர் மணி உள்ளிட்ட கோவில் பணியாளர்கள் செய்திருந்தனர்.

## தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல்..

# மூலனூர் ஒன்றியத்தில் முன்னாள் அமைச்சர் முத்துசாமி தலைமையில் திமுகவினர் தீவிர தேர்தல் பிரச்சாரம்..





ஈரோடு. செப். 28

நடைபெறவுள்ள தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைதேர்தலுக்காக திமுக வேட்பாளரை ஆதரித்து முன்னாள் அமைச்சர் சு. முத்துசாமி தலைமையில் திமுகவினர் மூலனூர் ஒன்றியத்தில் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நடைபெற்று முடிந்த சட்டமன்ற பொது தேர்தலில் தாராபுரம் சட்டமன்ற தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சத்தியபாமா பின்னர் தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு தமிழக வெற்றி கழகத்தில் இணைந்தார்.

அதேபோல் மதுராந்தகம்( தனி) தனித் தொகுதியிலும் அதிமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மரகதம் குமரவேல் தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு தமிழக வெற்றி கழகத்தில் இணைந்தார்.

இதனைத் தொடர்ந்து அந்த இரு தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் அக்டோபர் 6 ஆம் தேதி வாக்குப்பதிவும்,9 ஆம் தேதி வாக்கு எண்ணிக்கையும் நடைபெற உள்ளது.

இந்த நிலையில் இந்த இரு தொகுதிகளிலும் திமுக, அதிமுக, தவெக, இரு கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் நாம் தமிழர் கட்சி போட்டியிடுகின்றன.

5 முனை போட்டி நிலவும் சூழ்நிலையில், தொகுதியில் தவெக வேட்பாளர்களுக்கு கிராமப்புறங்களில் கடும் எதிர்ப்பு தெரிவித்து பொது மக்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் தாராபுரம் தொகுதியில் திமுக மற்றும் அதிமுகவினர் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொடர்ந்து திமுக வேட்பாளர் சுகன்யாவை ஆதரித்து தொகுதி முழுவதும் பல பகுதிகளாக பிரித்து திமுகவினர் முன்னாள் அமைச்சர்கள் தலைமையில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த தொகுதியில் திமுக வேட்பாளர் ஆதரித்து மாநில இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தனது தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொண்டார்.

இந்த நிலையில் தொகுதிக்குட்பட்ட மூலனூர் ஒன்றிய பகுதிகளில் முன்னாள் அமைச்சர் ஈரோடு முத்துசாமி தலைமையில் திமுகவினர் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

வீடு வீடாக சென்று வாக்காளர்களை நேரில் சந்தித்து அவர்கள் தங்கள் கட்சியின் வேட்பாளருக்கு ஆதரவாக தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

# கரூர் துயரச் சம்பவம் ஓராண்டு நிறைவு: "நினைவு மட்டுமல்ல... நீதியும் உண்மையும் தேவை" டிடிவி தினகரன்..



சென்னை, செப்.28–

தமிழ் திரையுலகில் பிரபல நடிகராக பல ஆண்டுகளாக கோலோச்சியவரும், தற்போதைய தமிழக முதல் அமைச்சருமான விஜய், கடந்த 2023ம் ஆண்டு தமிழக வெற்றிக்கழகம் என்னும் கட்சியை தொடங்கி, அரசியலில் கால்பதித்தார். அதன் தொடர்ச்சியாக மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.கரூர் கூட்ட நெரிசல்அதன்படி மக்களை சந்திக்க கடந்த ஆண்டு செப்டம்பர் 27ந் தேதி அவர் கரூர் மாநகருக்கு வருகை தருவதாக அறிவிக்கப் பட்டிருந்தது. அவரை நேரில் காணும் ஆவலில் அவரது கட்சியினரும், பொதுமக்களும் கலந்துகொண்ட மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியின்போது ஏற்பட்ட கட்டுக்கடங்காத கூட்டத்தில் குழந்தைகள், பெண்கள் என பலர் சிக்கினர். முடிவில் 41 பேரை இந்த நெரிசல் சம்பவம் பலி கொண்டு கரூரை கண்ணீரில் மூழ்கடித்து விட்டது. கால சுழற்சியில் கூட்ட நெரிசல் சம்பவம் நடைபெற்று ஓராண்டாகி விட்டது. ஆனால் அந்த நெரிசல் சம்பவம் கரூர் மக்கள் மனதில் மறையாத வடுவாக மாறிப்போனது.. இதுதொடர்பாக, அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது: கரூர் மாவட்டம் வேலுச்சாமிபுரத்தில் நடைபெற்ற தவெக தலைவர் ஜோசப் விஜய் பிரச்சாரத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 உயிர்கள் பறிபோன முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்று என் நெஞ்சில் குடியிருக்கும் என தனது பேச்சைத் தொடங்கும் தவெக தலைவர் விஜய், தன்னை பார்க்க வந்து கூட்ட நெரிசலில் சிக்கி கொத்து கொத்தாக மடிந்து கொண்டிருந்த நேரத்தில் அதற்கு தார்மீக பொறுப்பேற்காமல் புறமுதுகிட்டு ஓடிவிட்டு தற்போது அப்பெருந்துயரத்தை ஒரு சமூக வலைத்தள பதிவிற்குள் சுருக்க நினைப்பது எவ்வளவு பெரிய அநியாயம் ?.அஞ்சலிஉயிரிழந்த 41 பேரின் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட நிவாரணமும், பணிப்பலன்களும் மட்டுமே தீர்வாக அமையாது என்பதோடு, தமிழக மக்களின் மனங்களில் அழியாத ரணமாக பதிந்திருக்கும் பெருந்துயரம் தொடர்பாக சி.பி.ஐ மேற்கொள்ளும் விசாரணையை விரைவுபடுத்தி அதற்கு காரணமானவர்கள் அனைவரின் மீதும் கடுமையான நடவடிக்கை எடுப்பதே உயிரிழந்த 41பேருக்கும் நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும். இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.",

# திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபம் ஏற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்; இந்து முன்னணி மாநில தலைவர் பேட்டி...

ஈரோடு அருகே உள்ள முள்ளாம்பரப்புவில் உள்ள ஒரு தனியார் மண்டபத் தில் இந்து முன்னணி மாநில செயற்குழு கூட்டம் நேற்று நடைபெற்றது.இதற்கு மாநில தலைவர் காடேஸ்வரா சி.சுப்பிரமணியம் தலைமை தாங்கினார். கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்துக்கு பின்னர் இந்து முன்னணி மாநில தலைவர் காடேஸ்வரா சி.சுப்பிரமணியம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறிய தாவது:.ஈழத் தமிழர் சிவராசா அனோஜனுக்கு சவுதி அரேபியா கோர்ட்டு மரண தண்டனை அறிவித்தது. மத்திய அரசு உடனடியாக தலையிட்டு அவரை மீட்க வேண்டும். திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்றப்பட வேண்டும் என்ற ஐகோர்ட்டு தீர்ப்பை தமிழக அரசு காலதாமதம் இன்றி அமல்படுத்த வேண்டும்.அரசு புறம்போக்கு நிலத்தில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றி சட்டப்படி அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பள்ளி மாணவர்களுக்கு மாட்டிறைச்சி வழங்குவது குறித்து கூறியது கண்டிக்கத்தக்கது.இவ்வாறு அவர் கூறினார். "

# ஆசிய போட்டியில் வெள்ளி வென்ற அபய் சிங்... முதல்அமைச்சர் ரூ.50 லட்சம் ஊக்கத்தொகை அறிவிப்பு...

சென்னை, செப்.28–

ஆசிய போட்டியில் வெள்ளி வென்ற அபய் சிங்கிற்கு முதல் அமைச்சர் ரூ.50 லட்சம் ஊக்கத்தொகை அறிவித்துள்ளார். இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: வாழ்த்துஜப்பானில் நடைபெற்றுவரும் 20வது



ஆசிய விளையாட்டுப் போட்டியில் ஸ்குவாஷ் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்று தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்த்துள்ள ஸ்குவாஷ் வீரர் அபய் சிங்கிற்கு எனது நெஞ்சார்ந்த பாராட்டுகளையும், நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்..அவரது சிறப்பான சாதனையைப் பாராட்டும் வகையில், தமிழ்நாடு அரசு சார்பில் ரூ.50 இலட்சம் உயரிய ஊக்கத்தொகை வழங்கப்படும். ஸ்குவாஷ் வீரர் அபய் சிங் அவர்களின் இவ்வெற்றி, தமிழ்நாட்டின் இளம் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்குப் புதிய உத்வேகத்தை அளிக்கும். அவர் எதிர்காலத்திலும் பல வெற்றிகளைப் பெற்று தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்க்க வாழ்த்துகிறேன்.

# திருச்சியில் மாநில அளவிலான கிரிக்கெட் போட்டிகள் தொடக்கம்



16 கிரிக்கெட் அகடெமி அணிகள் பங்கேற்க்கும் மாநில அளவிலான அகடெமிகளுக்கு இடையிலான மேப் கிரிக்கெட் அகடெமி கோப்பைக்கான 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி லீக் மற்றும் நாக் அவுட் முறையில் நேற்று தொடங்கி வருகிற அக் 4ந்தேதி திருச்சியில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகிறது.இந்த போட்டியை கல்லூரி செயலாளர் எஸ். ரவீந்தரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தொழில் அதிபர் அருண் கண்ணப்பன், மேப் கிரிக்கெட் அணி நிறுவனர் டி. திலக்சந்தர், வழக்கறிஞர் எஸ். பிரதீப், மேப் கிரிக்கெட் அகடெமி தலைமை பயிற்சியாளர் ஆர். சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் தொடங்கி வைத்தார்.இதில் ஏராளமான அணிகள் பங்கேற்கின்றன.

## வங்கிகள் 3 நாட்கள் வேலைநிறுத்தம் எதிரொலி

# ஞாயிற்றுக்கிழமையான நேற்று வங்கிகள் செயல்பட்டன பணப்பரிவர்த்தனைகளை வாடிக்கையாளர்கள் மேற்கொண்டனர்

திருச்சி செப் 28

வாரத்துக்கு 5 நாள் வேலை என்பதனை உறுதி செய்திட வேண்டும், ஓய்வூதியபயன்கள் முறையாக வழங்கிட வேண்டும், காலிப்பணியிடங்களை நிரப்பவேண்டும், தற்காலிக ஊழியர்களை பணிநிரந்தரம் செய்திட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வங்கி ஊழியர்கள் இன்றுமுதல் 30ந்தேதி வரை நாடு முழுவதும் 3 நாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகின்றனர், இந்த வேலை நிறுத்தம் தொடர்ச்சியாக, வங்கி சேவைகள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால், வங்கி வாடிக்கையாளர்கள் பாதிக்கப்படாமல் தடுக்கும் வகையில், ஞாயிற்றுக் கிழமையான இன்று வங்கிகள் இயங்கும் என மத்திய அரசு அறிவித்தது.

இதேபோன்று, வேலை நிறுத்தத்துக்கு முன்பு அத்தியாவசிய வங்கி பரிவர்த்தனைகளை முடித்துக்கொள்ளுமாறு வங்கிகளும் வாடிக்கையாளர்களை அறிவுறுத்தி உள்ளன. மேலும் பண தேவைகளுக்கு தங்கள் வங்கிகளின் ஏ.டி.எம். மையங்கள் மற்றும் இன்டர்நெட் பேங்கிங், யு.பி.ஐ. உள்ளிட்டவற்றை பயன்படுத்துமாறும் கேட்டுக்கொண்டுள்ளன.

அதன்படி திருச்சியில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அனைத்தும் ஞாயிற்றுக்கிழமை ஆன இன்றும் வழக்கம் போல செயல்பட்டது, ஏற்கனவே மத்திய அரசு சார்பில் அறிவிப்பு விடுக்கப்பட்டநிலையில், ஏராளமான வங்கி வாடிக்கையாளர்கள் பணம் செலுத்தவும், பணம் எடுக்கவும் மேலும் வங்கி சேவையை பயன்படுத்துவதற்காக வங்கிகளில் குவிந்தனர்.இதனால் வங்கிகளில் வாடிக்கையாளர்கள் கூட்டம் அலைமோதியது.



திருச்சி ரயில் இருப்பு பாதை காவல் நிலையம்: 26/09/26ம் தேதி சிறப்பு ரோந்து அலுவலாக முதல் நிலைக் காவலர் 517 கண்ணதாசன், மற்றும் காவலர்கள் 950 ரெங்கபாஷ்யம், 1560 ராஜ்குமார் ஆகியோர் சகிதம் விழுப்புரம் இரயில் நிலையத்தில் இருந்து திருச்சி வரை, வண்டி எண். 22605 புருலியா இருந்து திருநெல்வேலி வரை செல்லும் வண்டியில், ( திருச்சி நடைமேடை எண் 6, மணி22.00) தமிழக அரசால் தடை செய்யப்பட்டுள்ள கஞ்சா , குட்கா, போன்ற போதைப் பொருட்களை சோதனை செய்வதற்காக பயணிகளின் உடமைகளை சோதனை செய்ததில் பின்புற பொதுப்பெட்டியின் இருக்கைக்கு கீழ் 1 சோல்டர் பேக்,( சிவப்பு நிறம்), இருந்ததை சோதனை செய்ததில் கஞ்சா மற்றும் குட்கா பாக்கெட்டுகள் இருந்தன. *மொத்த எடை கஞ்சா900gram குட்கா 05.kg அவற்றை பறிமுதல் செய்து திருச்சி இருப்புப் பாதை காவல் நிலையம் வந்து நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது .

## சமூக பாதுகாப்பு திட்டங்களில் உதவித்தொகை பெற வங்கி கணக்குடன் ஆதார் எண்ணை உடனடியாக இணைக்க சென்னை கலெக்டர் உத்தரவு

சென்னை: சமூக பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் உதவித்தொகை பெற்று வரும் பயனாளிகள் அனைவரும், தமது நிதியுதவி தடையின்றி பெற இயலும் வகையில், உடனடியாக தங்களது வங்கிக்கிளையை அணுகி ஆதார் இணைப்பை மேற்கொள்ள வேண்டும் என்று கலெக்டர் மாலதி ஹெலன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.சென்னை மாவட்ட கலெக்டர் மாலதி ஹெலன் வெளியிட்ட அறிவிப்பு:சென்னை மாவட்டத்தில் சமூக பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் உதவித்தொகை பெற்று வரும் பயனாளிகள் அனைவருக்கும், இந்திய அரசின் வழிகாட்டுதலின்படி, செப்டம்பர் 2026 மாதம் முதல் ஆதார் அடிப்படையிலான பண பரிவர்த்தனை முறை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, இம்மாதம் முதல் பயனாளிகளுக்கான நிதியுதவித்தொகை, அவர்களது ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ள வங்கிக்கணக்கில் மட்டுமே செலுத்தப்படும்.

அனைத்துப் பயனாளிகளுக்கும் நிதியுதவி முறையான அரசு நடைமுறைகளின் வழியே, எவ்வித தடையுமின்றி, சரியான காலத்தில் சென்றடைவதை உறுதி செய்யும் வகையில் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வங்கிக் கணக்குடன் ஆதார் எண் இணைக்கப்படாத பயனாளிகள், தமது நிதியுதவி தடையின்றி பெற இயலும் வகையில், உடனடியாகத் தங்களது வங்கிக்கிளையை அணுகி ஆதார் இணைப்பை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இதுதொடர்பான ஏதேனும் சந்தேகங்கள் அல்லது உதவி தேவைப்பட்டால், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்படும் சிறப்புத் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அலுவலகம் அல்லது ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகத்திலும் அமைக்கப்பட்டுள்ள தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அலுவலகங்களின் உதவி மையங்களை பயனாளிகள் அணுகி, தேவையான வழிகாட்டுதலையும் உதவியையும் பெறலாம். ஒவ்வொரு பயனாளிக்கும் நிதியுதவி எவ்வித இடையூறுமின்றி, முறையாகவும் சீராகவும் சென்றடைவதை உறுதி செய்வதில் மாவட்ட நிர்வாகமும் மாநில அரசும் முழு அக்கறையுடன் செயல்பட்டு வருகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கேரளாவை சேர்ந்த தொழிலாளி சடலமாக மீட்பு : அடித்து கொலையா? போலீசார் விசாரணை



திருவள்ளூர் செப் 28 :

கேரள மாநிலம் கொல்லம் மாவட்டத்தை சேர்ந்த ஸ்ரீ குமார் (45) என்பவர் உள்பட 4 பேர் திருவள்ளூர் சிவிஎன் சாலையில் பொழுதுபோக்கு கண்காட்சி மற்றும் பொருட்காட்சிக்கு கூடாரம் அமைக்கும் பணிக்காக கடந்த சில தினங்களுக்கு முன்பு வந்துள்ளனர். இதில் ஸ்ரீ குமாருக்கு மது அருந்தும் பழக்கம் இருப்பதாக கூறப்படுகிறது. இதனால் தினமும் மது அருந்துவதற்காக கூலி கேட்டு வந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் கடந்த 19 ஆம் தேதி முதல் காணாமல் போனதாக திருவள்ளூர் டவுன் போலீசில் கேரளாவில் இருந்து வேலைக்கு வந்தவர்கள் புகார் அளித்துள்ளனர். கேரளாவுக்கு சென்று விட்டாரா அல்லது வேறு எங்கேயும் சென்று விட்டாரா என்று போலீசார் வழக்குப் பதிவு செய்து தேடி வந்தனர். இந்நிலையில் பூண்டி ஒன்றியம் ஒதிக்காடு கிராமத்தில் உள்ள காய்ந்த ஏரியின் மையப் பகுதியில் அடையாளம் தெரியாத ஆண் சடலம் கிடப்பதாக கிராம நிர்வாக அலுவலர் விக்னேஷ்க்கு கொடுத்த தகவலின் பேரில் புல்லரம்பாக்கம் போலீசார் பிரேதத்தை பற்றி விசாரணை மேற்கொண்டனர்.

உடலில் முகம், கை, கால் ஆகிய பகுதிகளில் நாய், நன்றி போன்ற விலங்குகள் குதறி இருப்பதால் அடையாளம் காண முடியாமல் இருந்த நிலையில் ஸ்ரீ குமாரின் உறவினர்கள் அவர் அணிந்திருந்த பனியனை அடையாளமாக காட்டி உறுதி செய்தனர். காணாமல் போன 19 ஆம் தேதியே இந்த பகுதியில் அவர் இறந்து போனதால் விலங்குகள் குதறியிருக்க கூடும் எனவும் கூறப்படுகிறது. எனவே கேரளாவில் இருந்து பொழுதுபோக்கு கண்காட்சிக்கு கூடாரம் அமைக்க வந்த கேரளாவைச் சேர்ந்த ஸ்ரீ குமார் என்பது உறுதியானது.

இதையடுத்து ஸ்ரீ குமாரின் உடலை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக திருவள்ளூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். திருவள்ளூரில் இருந்து கிட்டத்தட்ட 15 கிலோ மீட்டர் தூரமுள்ள ஒதிக்காடு கிராமத்தில் உள்ள காய்ந்த ஏரியில் சடலமாக மீட்கப்பட்டிருப்பதால், கேரளாவை சேர்ந்தவர் இந்த ஏரிக்கு எப்படி வந்தார்? யாராவது அழைத்து வந்தார்களா? குடிபோதையில் தவறி விழுந்து இறந்தாரா? அல்லது வேறு யாரேனும் அடித்து கொலை செய்து விட்டு வீசி சென்றார்களா என பல்வேறு கோணங்களில் போலீசார் வழக்குப் பதிவு செய்து மேலும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421, 9750589992